# Chennai Metropolitan Development Authority
## PLANNING PERMIT
(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 11294

Date of Permit 17.2.2017

B/SPL-BLDG / 50-A to D/2017

File No. B2/ 9904/2015 Premium FSI

Name of Applicant with Address Mrs. P. MARUTHAMBAL @ MARUTHAMMAL
No 57, Gomathi street, Gomathi Nagar, Chitlapakkam, Chennai-64

Date of Application 16.6.2015

Nature of Development : ~~Layout/Sub-division of Land~~/Building construction/~~Charge in use of Land~~/Building

Proposed construction of Group Development of 3 Blocks each Stilt Floor + 4 Floors Residential Building with 60 D/U abutting Kalyana Sundaram Street,

Site Address

Division No. Deepika Nagar, Phase III, Chitlapakkam, Chennai-64 comprised in S. No 21/3A, 21/4, 24/1A & 24/1B of Chitlapakkam Village, within Chitlapakkam Town Panchayat limit.

Development Charge paid Rs. 76,280/- Challan No. B002899 Date 25.11.2016

PERMISSION is granted to the ~~layout/sub-division of land~~/ building construction/~~change in use of land/~~building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 16.2.2020

the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

[signature] 17/2/2017

For MEMBER SECRETARY

[initials] 16-2-2018

## CONDITIONS

Note : 1. According to Section 79 of the T. & C. P. Act 1971 ( Act 35 of 1972) as amended by Act 22 of 1974 any person aggrieved by any decision of order of the Planning Authority Under section 49 or sub section (1) of section 54 may appeal to the Government within Two months from the date on which the decision or order was communicated

2. The Member Secretary, Chennai Metropolitan Development Authority reserves the right to revoke or modify the planning permission in the event of planning permit having been granted based either on wrong information furnished by the applicant or by misrepresentation of the facts or by any lapse of procedural formalities to be followed or permit having been obtained by any fraudulent manner.

# சிட்லபாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயலாணைகள்

முன்னிலை: திரு. **பா.செண்பகராஜன்**

க.உ.எண் : **106/2016-17.**

மூ.மு.எண் : **77/2017** நாள்:**06.03.2017.**

பொருள் : கட்டிட வரைப்பட அனுமதி – சிட்லபாக்கம் பேரூராட்சி – கல்யாண சுந்தரம் தெரு – தீபிகா நகர் **Phase-III** – சர்வே எண்.**21/3A, 21/4, 24/1A, 24/1B -** தரை தளம் முதல் நான்காம் தளம் வரை – கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

பார்வை :
**1)** திருமதி.மருதம்பாள் என்கிற மருதம்மாள் என்பவரின் விண்ணப்ப நாள்:**20.02.2017.**
**2)** உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அலுவலர்களின் கடித எண்.பி**2/9904/2015,** நாள் **17.02.2017** மற்றும் திட்ட அனுமதி எண். **11294/B/SPL-BLDG/50-A to D/2017,** நாள் **17.02.2017**
**3)** இவ்வலுவலக குறிப்பாணை கடித ந.க.எண்.**77/**அ**1/2016,** நாள் **20.02.2017.**

*****

**ஆணை:–**

திருமதி.மருதம்பாள் என்கின்ற மருதம்மாள் என்பவருக்கு சிட்லபாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட கல்யாண சுந்தரம் தெரு, தீபிகா நகர் **Phase-III,** சர்வே எண்.**21/3A, 21/4, 24/1A, 24/1B,** தரை தளம் முதல் நான்காம் தளம் வரை கட்டிடங்களுக்கு வரைபட அனுமதிகோரி பார்வை 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினைத் தொடர்ந்து, பார்வை 2–ல் குறிப்பிட்டுள்ள உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களால் கட்டித்திற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, இப்பேரூராட்சி மூலம் கட்டிட உரிமம் வழங்குவதற்கான கட்டணங்கள் குறித்த விவரம் பார்வை 3–ல் குறிப்பிட்டுள்ள இவ்வலுவலக குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதனைத் தொடர்ந்து இப்பேரூராட்சி மூலம் மேற்படி கட்டித்திற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.

இந்த அனுமதியானது **05.03.2020**–ம் தேதி வரை மூன்று ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் **ரூ.35,95,000/–**(ரூபாய் முப்பத்தி ஐந்து இலட்சத்தி தொன்னூற்று ஐந்தாயிரம் மட்டும்) அனுமதிகட்டணம் செலுத்தியமைக்கான பல வகைப்பட்ட ரசீதுஎண்: **3274/2016-17** நாள்:**06.03.2017** மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கட்டுமான நலநிதி வாரியத்திற்கான சந்தா தொகை **ரூ.7,53,600/–**ஐ, கரூர் வைஸ்யா வங்கி, வரைவு எண்:**273728,** நாள்:**06.03.2017** மூலம் செலுத்தியுள்ளார்.

**நிபந்தனைகள்**

1. கட்டிடத்தின் முன் பக்கத்திலும் பின் பக்கத்திலும் மற்றும் இரு பக்கங்களிலும் அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
2. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **1920** மற்றும் **1994**–ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் படி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
3. அரசாங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்மந்தமில்லாத வேறு இடங்களிலோ ஆக்கிரமனம் செய்வது கூடாது.
4. கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ இப்பேரூராட்சியில் இருந்து ஆய்வு செய்யவரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.
5. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட கால வரையறைக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்.
6. அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் செயல் அலுவலருக்கு விண்ணப்பம் செய்து ஆணை பெற்றபிறகு தான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.
7. கட்டிடம் கட்ட ஆணை பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி ஆணையை ரத்து செய்ய செயல் அலுவலருக்கு உரிமை உண்டு.

...2

8. புதியதாக கட்டப்படும் கட்டிடத்தில் மழைநீர் சேகரிப்பு தொட்டி தவறாமல் அமைத்திடல் வேண்டும். மேலும் ஒப்புறுதி பத்திரத்தின்படி அனுமதிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டவாறு மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்காவிடில் அபராதம் விதிப்பதுடன் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்ட பின்னரே தடையின்மை **(N.O.C.)** சான்று வழங்குவது மற்றும் சொத்துவரி விதிப்பது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.
9. புதியதாக கட்டப்படும் கட்டிட இடங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொதுச்சுகாதாரக் கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் வேண்டும்.
10. மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.
11. கட்டிடத்திலிருந்து வெளிவரும் கழிவுநீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகாலும் கழிவுநீர் தொட்டிகளும் அமைத்துக்கொள்ள வேண்டும்.
12. கட்டிடம் தொழிலகங்களுக்காகவோ அல்லது வேறு தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படவிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலகங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர், செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியோரிடமிருந்து அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.
13. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு பெறுவதற்கான தடையின்மைச் சான்று வழங்கப்படும். வரைபடங்களுக்கு புறம்பாக கட்டிடம் இருப்பின் தடையின்மை சான்று மறுக்கப்படும்.
14. கட்டிட வேலை முடிந்த பின்போ அல்லது குடியேறிய பின்னரோ **15** தினங்களுக்குள்ளாக செயல் அலுவலருக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.
15. கட்டுமானப் பணி துவங்கி ஆழ்துளை கிணறுகள் அமைக்கும்பொழுது பாதுகாப்பு நலன் கருதி அறிவிப்பு பலகை, தடுப்பு வேலிகள் மற்றும் விளம்பர பலகைகள் மற்றும் பாதுகாப்பு மூடி அமைத்திட வேண்டும்.
16. **150** சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட கட்டுமான குடியிருப்புகளில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் பிரிவு **17B** ன்படி சூரிய ஒளியினை பயன்படுத்தி தண்ணீர் சூடாக்கும் உபகரணம் பொருத்தப்பட வேண்டும்.
17. சென்னை பெருநகர வளர்ச்சி குழும சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதின் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் சில உரிமையை உறுதிபடுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரைய பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறதா ?
18. சொத்தினை வாங்க விருப்பும் எந்த நபரும் விண்ணப்பதாரக்கு சொத்துமீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரியனால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். அதனை முடிவு செய்ய சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

6/3/17

செயல் அலுவலர்,
சிட்லபாக்கம் பேரூராட்சி
சென்னை-**64.**

பெறுநர்:–

திருமதி.மருதம்பாள் என்கிற மருதம்மாள்,
**No.51,** கோமதி தெரு,
கோமதி நகர், சிட்லபாக்கம்,
சென்னை–**64.**

6/3/17